வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.3653/அ3/2025 நாள். 22.07.2025
---

பொருள் : பள்ளிக் கல்வி – 2025–2026ஆம் ஆண்டு பொதுமாறுதல் கலந்தாய்வு – மனமொத்த மாறுதல் கலந்தாய்வு – வேலூர் மாவட்டம், அரசு/ நகரவை/உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்கள் **விண்ணப்பங்களை கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய தெரிவித்தல்** – தொடர்பாக.

பார்வை : சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.037584/சி3/இ1/2025 நாள்.21.07.2025.

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/ நகரவை/ உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கான 2025–2026ஆம் ஆண்டு **மனமொத்த மாறுதல் விண்ணப்பங்களை (மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம்)** கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றி EMIS இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து அரசு/ நகரவை/ உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

- ஓய்வு பெறுவதற்கு முன் குறைந்தபட்சம் இரு கல்வி ஆண்டுகள் பணிக்காலம் உள்ள ஆசிரியர்களே மனமொத்த மாறுதல் கோர தகுதியானவர்கள். (Example 2025–26 மற்றும் 2026–27 கல்வியாண்டுகளில் ஓய்வு பெறுபவர்களாக இருத்தல் கூடாது).

- ஏற்கனவே 2023–24 மற்றும் 2024–25ஆம் கல்வி ஆண்டுகளில் மனமொத்த மாறுதல் ஆணை பெற்றவர்கள் தற்போது பணிபுரியும் பள்ளியில் குறைந்தபட்சம் இரு ஆண்டுகள் பணிபுரிந்து இருத்தல் அவசியம் என்பதால் அவ்வாறனவர்கள் தற்போது மனமொத்த மாறுதல் பெற தகுதியற்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களை மனமொத்த மாறுதலுக்கு பரிந்துரைக்கக் கூடாது.

- ஆண் ஆசிரியர்கள் பெண்கள் மட்டும் பயிலும் (Giris High & Hr.Sec.school) பள்ளிகளுக்கு மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்களை அனுமதிக்ககூடாது. இருபாலர் பயிலும் பள்ளிகள் (Co–ed) மற்றும் ஆண்கள் பயிலும் பள்ளிகளுக்கு மட்டும் அனுமதிக்கப்படவேண்டும்.

- நடப்பு கல்வி ஆண்டில் (2025–26) நடைபெற்று முடிந்த பொது மாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வில் கலந்து கொண்டு மாறுதல் ஆணை பெற்றவர்கள் மனமொத்த மாறுதல் கோரி விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.

<u>EMIS இல் மனமொத்த மாறுதல் பதிவேற்றம் செய்யும் முறை</u>

1. மனமொத்த மாறுதல் கோரும் ஆசிரியர் தனது Individual Login Transfer Application Mutual Transfer என்ற மனமொத்த மாறுதலுக்கான படிவத்தில் தங்களது விவரங்களை முழுமையாக உள்ளீடு செய்யவேண்டும். மேலும் எந்த ஆசிரியருக்கு மனமொத்த மாறுதல் அளிக்க விரும்புகிறார் என்பதனை அவ்வாசிரியரது EMIS ID (8 Digit ID) யை குறிப்பிட்டு Submit செய்யவேண்டும். பின்னர் அப்பள்ளியின் தலைமையாசிரியர் தனது பள்ளியின் EMIS Login IDயில் உள்சென்று மேற்படி மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியரது விண்ணப்பத்தில் உள்ள விவரங்களை சரிபார்த்து 1st Level Approval செய்யவேண்டும்.

2. அனைத்துவகை ஆசிரியர்களுக்கு முதல்நிலை ஒப்புதல் அலுவலர் சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆவார், இரண்டாம் நிலை ஒப்புதல் அலுவலர் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர் ஆவார்.

3. உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு சம்மந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆவார்.

4. மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு சம்மந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மட்டுமே ஒப்புதல் வழங்கும் அலுவலர் ஆவார்.

## கால அட்டவணை

| வ.எண் | பொருள் | நாள் |
|---|---|---|
| 1 | மனமொத்த மாறுதல் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாட்கள் | 22.07.2025 முதல் 27.07.2025 வரை |
| 2 | மாறுதல் விண்ணப்பங்களின் உள்ள விவரங்களின் அடிப்படையில் அலுவலர் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டிய நாள்(Approval from competent authorities) (HM, DEO & CEO) | 28.07.2025 |

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்
அரசு/நகரவை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.